**அனைத்து மாவட்ட விளைாட்டு அலுவலர்களின் ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. பி.பென்ஜமின் அவர்கள் தலைமையில் இன்று (01.07.2016) நடைபெற்றது.**

அனைத்து மாவட்ட விளையாட்டு அலுவலர்களின் ஆய்வுக்கூட்டம் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் மாண்புமிகு கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. பி.பென்சமின் அவர்கள் தலைமையில் இன்று (01.07.2016) நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலக அளவில் விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு சிறப்பான இடத்தில் அங்கம் வகிக்கும் வகையில், விளையாட்டு மேம்பாட்டிற்காக பல்வேறு உன்னதத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். 2011 முதல் இதுவரை சுமார் ரூபாய் 547.64/– கோடி நிதியை விளையாட்டுத் துறைக்கென ஒதுக்கி பல்வேறு சிறப்பான திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி உள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளையாட்டுத் துறையில், உலகத்தரம் வாய்ந்த பல்வேறு கட்டமைப்புகளை உருவாக்கித் தந்துள்ளார்கள். கிராம அளவில் விளையாட்டு வீரர்களை கண்டறிந்து, அவர்களுக்கு தக்கப் பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து, அவர்களை தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கச் செய்யும் வகையில், மாநிலத்தில் பல்வேறு நிலைகளில் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறார்கள். கிராம அளவில் விளையாட்டுகளை மேம்படுத்திட ஆண்டுதோறும் ரூபாய் 25 கோடி ஒதுக்கீடு செய்து, விளையாட்டு வீரர்களை கண்டறிந்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தி வருகிறது.

மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், மக்களின் பயன்பாடு கருதி ஒவ்வொரு திட்டத்தையும் கடமை உணர்வோடு நிறைவேற்ற வேண்டும். மாவட்டங்களில் உள்ள விளையாட்டுத் திடல்கள் மற்றும் கட்டமைப்புகளை சிறப்பான முறையில் பராமரித்து பாதுகாக்க வேண்டும். பயிற்றுநர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும். தங்கள் மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகளை தனிக்கவனம் செலுத்தி அதனை குறித்தக் காலத்தில் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும். விளையாட்டு வீரர்களுக்கான பயிற்சியை மேம்படுத்த வேண்டும். மேலும், யோகா, நீச்சல் உள்ளிட்ட பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்து செயல்பட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்டங்களில் விளையாட்டுத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்தும் விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளின் முன்னேற்றம் குறித்தும், விளையாட்டு விடுதிகளின் செயல்பாடுகள் குறித்தும், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள், விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலர் முனைவர் ராஜேந்திரகுமார், இ.ஆ.ப., பொது மேலாளர் திரு. நியூபிகின் செல்லப்பா, துணைப் பொது மேலாளர் திரு. அ. சாந்தன், மண்டல முதுநிலை மேலாளர்கள், மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், விளையாட்டு விடுதிகளின் மேலாளர்கள் மற்றும் அலுவலக கண்காணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை–84.**

1/7/16

உதவி இயக்குநர் (செய்தி மக்கள் தொடர்பு)